உ

[illegible]

[illegible]

(ருசிது) [illegible]

[illegible]

உ

சுபமஸ்து.

பிரசித்தம்.

சூதசம்மிதாப் பிரகடனம்.

ஸ்காந்தமஹாபுராணத்துள்ள ஆறு சம்மிதைகளுள் ஒன்ருய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைதசித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்மிதை யென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்தவிஷயமாம். நம் சைவசமயத்துள் எவ்விஷயங்களை அறிய விரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் மேன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன்பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னுட்டவர்க்கு மிக உபயோகந் தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புத்தகம் 1-ரூபா 5-க்கு விற்கப்பட்டுவருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னுட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் [illegible]ளின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில் அச்சி[illegible]க்கும் உபயோகமாகும்பொருட்டு மிகச் சொற்பவிலையாகிய 2-ரூபாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கின்றோம்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து இதுமுதல் மூன்று மாசத்துக்குள் இதன் கிரயமாகிய ரூபா இரண்டையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மாசம் 1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மாசம் வரையிலாவது அல்லது 16-மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிகோ பயிண்[illegible] செய்து ஒரே தடவையில புத்தகமாக்கியாவ[illegible] 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம், 50-க்கு [illegible] இனமாகக் கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்க[illegible] ப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்[illegible] சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது [illegible] புத்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தம[illegible] கடிதமூலமாகத் தெரிவித்தலும்வேண்டும். புரட்டாசி[illegible]க்குள் அனுப்பப்படும் கையொப்பங்களேயன்றி அதன்மேல் வரும் கையொப்பங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

விரோதிஹு வைகாசிமீ 29உ } இங்ஙனம்,
கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்.
ப்ரமவித்தியாப்ரெஸதலைவர்.

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

ப்ரம்மவித்யா.

பத்திரகிரயம்.
1-வரு 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவத ல்லது ரூபா 1-க்கு அணு 1-சேர்த்துத்த பால்லேபிலாகவாவது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ॥ [illegible] ॥

௩-ம்புத்தகம்] சிதம்பரம்:— ௧௮௮௯ டிசம்பர்மீ ௰௨உ [இலக்கம்-௯

[illegible]

௧. [illegible]

௨. [illegible]

௩. [illegible]

௪. [illegible]

௫. [illegible]

௬. [illegible]

௭. [illegible]

[illegible]

பத்ரிகாவிதானங்கள்.

க. பத்திரிகை. வேண்டுவோர் ப்ரம்வித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உ. கடித முதலியவைகளும் மேற்படி மானேஜருக்கே அனுப்புதல்வேணடும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும்கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில்நல்லமைகொண்டு சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெரு.

௪. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவற்றை நன்ருக எழுதியனுப்புதல்வேண்டும். வேறு ஊர்களுக்குப் போககேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

௫. இன்னும் இதைப்பற்றி விவரம அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித் தெரிந்துகொள்ளலாம்.

௬. அனுப்பப்பட்ட கடிதங்கள்எவ்வித அசெளகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப்பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

R. நாராயணசாமிஐயர்.
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ,
சிதம்பரம்

[illegible]

சூதசம்மிதா பிரகடனம்.

ஸ்காந்த மகாபுராணத்துள்ள ஆறுசம்மிதைகளுள் ஒன்ருய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைத சித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்ஹிதையென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்த விஷயமாம். நம் சைவசமயத்துள்ள எவ்விஷயங்களை அறியவிரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்துவிளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியசுவாமிகள் மேன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன்பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகளால் இயற்றப்பட்டிருக்கிறது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னுட்டவர்க்கு மிக உபயோகசுந்தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புஸ்தகம் ஒன்று-ரூபா 5-க்குவிற்கப்பட்டு வருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னுட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில் யாவர்க்கும் உபயோகமாம் பொருட்டு அச்சிட்டு வருகின்றோம். நாம் முன் கையொப்பக்காரர்களுக்குக் குறித்த காலம் கழிந்துவிட்டமையால் இனி முன்பணமனுப்ப விருப்பமுள்ளவர்கள் ரூபா 3—0—0. அனுப்புதல்வேண்டும்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர்கையொப்பக்காரர்களாகச்சேர்ந்து இதன் கிரயமாகிய ரூபா மூன்றையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மாசம்1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மீ வரையிலாவது அல்லது 16 மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டு செய்து ஓரே தடவையில் புத்தகமாக்கியாவது அனுப்பப்படும். 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம, 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம் இனுமாகக்கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்கு மாசந்தோறும் சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்த புஸ்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தங்கருத்தைக் கடிதமூலமாகத் தெரிவித்தலும்வேண்டும். எழுத்துக்கள் புதிதாக வார்த்தமைபற்றி நாம் முற்குறித்தகாலத்தில் வெளிப்படாது தடைப்பட்டது. இப்பொழுது அச்சிடத்தொடங்கி வேலை நடந்துவருகிறபடியால்முதற்சஞ்சிகை இம்மாதக்கடைசியிலனுப்பப்படும்.

கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர், சிதம்பரம்.

[illegible]

ஆரியாசாரம்.

தொடர்பு.

அக்கினியைக் கையால் தீண்டலாகாது. தண்ணீரில் அதிககாலம் வசிக்கக்கூடாது. பெண்களை அவமதித்தல் பெருங்குற்றம். அவர்களை நம்புதலும் அங்ஙனமே. தீபத்தின் நிழல், மனிதர் நிழல், வஸ்திரம், மயிர், நகம், இவற்றின் தண்ணீர், ஆடு, கழுதை, துடைப்பம், பெண்களின் அடி, இவற்றின் தூசு இவை சரீரத்திற்படில் அது ஓர் பெருங்குறையாய் நமது ஐசுவரியத்தை விலக்கும். அக்கினியில் ஓமஞ்செய்த ஹவிஸ்ஸின் நன்மணம், பசுவின் கால்தூளிகள், வேதமோதும் தொனி இவை ஒரு முகூர்த்தம் சேர்ந்தாலும் அது சர்வபாபங்களையும் ஒழித்துவிடும். எந்த வீட்டில் காலைப்பொழுதுகளில் பற்பல விசித்திரமாகக் கோலங்கள் அமைகின்றனவோ அங்கு லக்ஷ்மி வசிப்பது திண்ணம். கருநாகம், கொடிய மசெய்கையுள்ள பிராமணன், தம்மில் உயர்வருணத்தவர்க்கு பதேசிக்கும் சூத்திரர், ஓடிவரும் கழுதை, வியபிசாரத்தாற் பிறந்தவன் இவர்களைத் தூரத்தில் விலக்கவேண்டும். எவ்விதக் கடுமையான வறுமை வரினும் அக்காலத்தும் மற்றவர் பொருளைக் கவறுதல்கூடாது. முன்தின்ற பண்டங்களிலும் வேருய் ஒன்றைத் தின்கவாவது முன்கொண்ட ஆசாரத்தின வேருய வாசாரத்தை யனுஷ்டிக்கவாவது கூடாது. உயிர்போகுந் தருணமாயினும சாஸ்திரங்களில் விலக்கிய கருமங்களைக் கைக்கோடல் கூடாது. தனது மெய்யறிவு, தன்தொழில், தன்பொருள், தன்வயது, தன் நிலைமை இவற்றிற்கேற்ப நடக்கவேண்டும். வேஷம்முதலியவற்றை அதிக ஆடம்பரத்துடன் தரிக்கக்கூடாது. மூவுலகப்பொருள்களை முற்றிலும அறிந்தவனுயினும், அவைகளைத் தனதிருப்பிடத்திருக்க வல்லவனுயினும், உலகப்பொது வியற்கைக்கேற்ற நடைகளை ஒழித்தல் கூடாது. எங்கேனும் இருவர் கலந்து ரகசியம பேசிவரின் அதை ஒளிந்து கேட்பது குற்றம். பிராமணன் மற்றவன் நிந்திக்கக்கேட்டும் மனம் வருந்தலாகாது; மற்றவர் புகழின் அதனுல் சந்தோஷமடைதலும் கூடாது. மோக்ஷத்திற்ருனே பற்றுள்ளவனுய் எங்கும அவமானம்வரினும்பொறுத்தருளவேண்டும். எங்குமுண்டாகும் அவமானமே தவத்தை விருத்திசெய்யும்; மங்குமானம் எக்காலத்தும் தவத்தைக் குறைக்கும். உலகத்தார் ஓர் அந்தணரைப் பூசிப்பரேல் அவர் கறந்த பசுவைப்போலத் தனது தவங்குன்றிப்போகிறுர்கள். தன்வயது, தன் பொருள், தன் வீட்டிற் கலகம், தன் குலமந்திரம, பெண்களுடன் கூடியது, மருந்து, தனது பொருள் வரவு, கொடுத்தல், அவமானம் இவைகளை எப்பொழுதும் மற்றவர் அறியாவண்ணம செய்யவேண்டும. மற்றவர் வீட்டில் சமைத்த மிகுதி அக்கினியை எக்காலமும் தமது வீட்டிற்குக்கொண்டுபோகக்கூடாது. அவ்வாறு கொண்டுவந்த அக்கினியால் பக்குவஞ்செய்த எவ்வகைப்பொருளாலும் செய்யும் எவ்வித நற்செய்கையில் அக்கினிகொடுத்தவன் பாதி பயன் பெறுவான். புருஷர் தீபங்களை அணைப்பதாலும் பெண்கள் பூசினிக்காயையுடைப்பதாலும் சீக்கிரகாலத்தில் வம்சம் குன்றும். இரும்பு,

[illegible]

விதைகள், தண்ணீர், அன்னம், பால், நெய் முதலிய தானியங்கள், மருந்து இவைகளை இரவில் கொடுப்பவர்க்கு வீடு சூன்யமாம். வாங்குபவர் வீடு தழைத்தோங்கும். (சிறிது பால், அன்னம், தண்ணீர், இவைகளை ஆபத்துக்காலத்தில் உதவினுல் தோஷமில்லை) துணியற்று நின்றும், கச்சையற்றிருந்தும், கௌபீனம் தரித்தும், கலகத்தில் புத்தியைச் செலுத்தியும்வரும் ஒரு கிரகஸ்தனுக்கு அலக்ஷ்மீ வாசம் எக்காலமுமுண்டாம். எக்காலமும அனேகர்களுடன் விரோதத்தைச் செய்துகொள்ளல்கூடாது. தனக்குக் கெடுதியான சங்கதிகளை மற்றவர்க்கும் செய்யாதிருக்கவேண்டும்.

மற்றதுவரும்.

வற்புறுத்தல்.

இங்கு எடுத்தோதிய பற்பல விலக்குகளுக்கு உதாரணங்களைக் கண்டமட்டில் எடுத்தெழுதிவருவாம். இராக்காலங்களில் மரத்தடிகளில் சென்றுல் அம்மரத்திற்குடிகொண்டிருக்கும் பக்ஷிமுதலியவற்றின் எச்சம் முதலியவை மேலே விழும்; அவற்றுல் சரீராரோக்கியம் குன்றுவதுமின்றி ரோகமுமுண்டாம். அம்மரங்களின் அடிப்பொந்துகளில் சர்ப்பம்முதலியவை குடியிருக்கும். ஆதலாற்றுன் இராக்காலங்களில் அவ்விடம செல்லலாகாதென்பது. அவ்விதமே மலமூத்திரங்களைக் கண்ணுற்றுல் அத்துர்நாற்றம் சரீரத்தில் வீச அதனுல் ரோகமு முண்டாகக்கூடும்; ஆகையால் அதை விலக்கினர். கைகளால் நதிகளைக்கடந்தால் பாதியில் சரீரபலங் குன்றுவதாலாதல், அந்நீரில் வரும் கொடிகளின் பற்றுலாதல், தண்ணீரிலுள்ள விஷஜந்துக்களின் தீண்டுதலாலாதல் கெடுதிசம்பவிக்குமென்பதே அங்குட்கருத்து. சூத்திரர்க்குத் தத்துவமுபதேசித்தலால் குற்றம்யாதெனில், அவர்க்குபதேசிக்கின் அவர் உலகவரம்புமீறி வருணுசிரமங்களை ஒழிப்பாரென்பது கருத்தாம். அங்கக்குறைவுள்ளவர் முதலியவரைப் பார்க்கக்கூடாது என்பதூஉம், அவரை நிந்திக்கக்கூடாதென்பதூஉம், அவரை நிந்தித்தலால் அப்பாபம் சிறிதனுகும் என்பதாற்றுன். அங்ஙனமே "அபவாதியானவன் பாபத்தைக் கொள்வான்" என்று ரிஷிகள் கூற்றுண்டு. படிப்பில்லாவிடினும் வயதுசென்றவர், வயது செல்வதால் நேர்ந்த புண்ணியம் பெற்றவராதலால் அவர்களை அவசியம் கௌரவிக்கவேண்டும். கைகளைக் கூட்டித் தலையைச் சொறிவது அனேக பாபத்தை விளைவிக்கும் என்பதிலும் அதனுல் தரித்திரம வரும் என்பதிலும் வேறுய் பயன் ஒன்றும் காணப்படவில்லை. பாவிகள் பாபத்தைச் சொல்வதால் அப்பாபம் இவனைப்பற்றும். பொய்யாய் ஒன்றைச்சொன்னுல் பொய்சொன்ன பாபம் ஒருபங்கும் மற்றவர் குற்றஞ்சொன்ன குற்றம் ஒருபங்குமாக இருபங்கு பாபம் வருமென்பது உண்மை. தண்ணீரில் நிழலைப்பார்ப்பதுகூடாதென்பது யாதுபற்றியோ அறியேன். தனது குறைவைத்தானே வெளியிடில் தன் சத்துருக்கள் பரிகசிப்பார்கள். அன்றில் எவ்வித சம்பவமும் தனது பூர்வகருமபரிபாகத்தாற்றுன் சம்பவிப்பதால் அதை வெளியிடாது மேல் நல்விஷயங்களில்

[illegible]

முயற்சி செய்யவேண்டும். தனது சினேகிதர்கள மரணத்தைக் கேட்டவர் அதிக வருத்தமுறுவாராதலால் அவ்விஷயத்தை மற்றவருக்குச் சொன்னுல் அவ்வித பாபத்துக்கு ஏதுவாவதும அனுசிதம்" என்பது கருத்து. காலைமாலைகளில் பிச்சைக்குவந்த வறிஞர்கள் வீடுவாயிலடைத்திருந்தால் வீணில் துயரம் பெறுவார். ஆகையால் அவ்விதம் செய்தல்கூடாது. தண்ணீரில் வெகுநேரம இருந்தால் சரீரத்தில் ரத்தவோட்டம் அடங்கி உஷ்ணமடங்கிப்போம். பெண்களை அவமதித்தால் அவர்காலத்தில் மனிதனுக்குப் பெரும் அபகீர்த்தி விளைவிப்பார்கள். அவர்கள் புத்தி புருஷனிலும் அதிக ஊக்கமுள்ளது. மேலும், பெண்களுட் கற்புள்ளவர் விசேடமாய்ப் புருடர்க்குள்ளடங்கி நடப்பவராதலின் அவர்களை மனவருத்தமுறச்செய்தல் மிகக்கொடிய பாபம. பின்னும் வீட்டிற் பெண்களிருப்பது கிருகத்திற்குப் பெரிய அலங்காரமாதலால் அவர்களை அவமதித்தலால் அவ்வவமானம் வீட்டின் பேரணியைக் குறைக்கும். ஆதலாற்றுன் "பெண்களே வீட்டிற்கழகு" என்று சொலலப்பட்டதுஎன்றறிக. பெண்கள் மனக்களிப்பைப்பற்றியே வீட்டிலுள்ள இல்லறத்தவர் சுகம்பெறவேண்டுவதால் அதைக்கவனித்து நடத்தவேண்டும் என்பது கருத்து. பின்னும் மனத்துயரமுற்ற பெண்கள் பெறும் குழந்தைகள் ஏதேனும் உண்டாயின் அவை மிக வியாதியுள்ளதும் துர்ப்பலமாயுமிருக்குமாதலால் அவ்விஷயத்தைக் கவனிக்கவேண்டும. உலகத்தில் ஸ்திரசக்தனுயுள்ளவனே விசுவசிக்கத்தக்கவன்; மற்றவன் அங்ஙனமாகான். ஆயின் பெண்கள் சித்தம் எப்பொழுதும் சஞ்சலமாதலால அவரிடம் நம்பிக்கை அதிகம் வைக்கக்கூடாமதென்பதுண்மை. தீபநிழல் முதலியவை கேவலம் பாபகாரணம என்றும், ஹவிஸ்முதலியவைபுண்ணியகரம் என்றும் தோன்றுகிறது. மற்றவர் பொருளை யாம் கருதி அது கைகூடாவிடம் அதனுல் எமக்கு மனவருத்தமும், கைகூடியவிடத்துப் பாபமும் உண்டாகுமாதலின், எக்காலமும் அது வேண்டுவதில்லை என்பதுண்மை. மேலும், கடவுள் அவனவன் கன்மங்களுக்கேற்ப உண்டாக்கின பொருளைத் தாம் கவருவது அவரதுசங்கற்பத்துக்கு விரோதமாதலால் அவன் அவருக்கும் விரோதியாவான். சிற்சில பொருள்களைத் தின்பது கூடாது. முற்காலத்தில் ஆராய்ச்சியில் மிகுந்த ஆரியர்உலகப்பொருள்களின்இயல்பையறிந்து அவைகள் அபக்ஷியமெனத் தள்ளிவைத்தார். ஆதலின் அவைகளை உட்கொண்டால்விசேஷமாய் ரோகங்களாலும்சரீரக்கெடுதலால் அல்லதுதமோகுணமிகுதியாலும்மனங்கெடுதலால் சம்பவிப்பதுண்மை.! அவ்விதமில்லாவிடம் சாமானியமாய்க் கிடைக்கத்தக்க பொருள்களை எதற்கென நம்முன்னோர் காரணமின்றி விலக்குவர். இஃதறியாத சிலர் "இரண்டு மரங்களிற் காய்த்த வாழைக்காய் முருங்கைக்காய்களுள் ஒன்றைக்கொள்வதும் மற்றதைத் தள்ளுவதும் யாதுபற்றி!" என்கின்றார்கள்.

மொழிபெயர்ப்பு.

இலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரி.

[illegible]

சுவர்ண சூத்தரங்கள்.

1 எவ்வகை ஜீவஜந்துவையும் நாசஞ் செய்யாதே; நாசஞ்செய்விக்காதே. அங்ஙனம் நாசஞ்செய்பவர்களின் நடத்தையை யொப்பாதே. (கசாப்புகடையில் மாம்சம் வாங்குகிறவன் இந்தச் சூத்திரத்தை மீறிநடக்கின்ருன். எங்ஙனமெனில், கொன்று வைத்திருக்கப்பட்ட மாம்சத்தை விலைகொடுத்து வாங்கின மாத்திரத்தினலேயே, அக்கடைக்காரன் செய்தகொலைத்தொழிலை அம்மாம்சம்வாங்கினவன் ஒப்பினது போலாயிற்றன்ரு. அதுபற்றிவாங்கினவனும் அக்கொலை செய்த பாபத்திற்குள்ளாகின்றனன்.) பலமுள்ளனவாயினு மில்லன வாயினும் எத்தன்மையுள்ள பிராணிகளானுலும் அவைகளை ஹிம்சிக்காதே.

2. எதையும்திருடாமலிரு. மற்ருெருவனைக் கொண்டு திருடச்செய்யாமலிரு. திருடுகிறவர்களின் நடத்தையை யொப்பாமலிரு. எவ்விதமான திருட்டையுமொழி

3. புத்திசாலியானவன் வியபிசாரத்தை தளதளவென்று மின்னுகின்றதணல் நிறைந்த குழியென்றெண்ணி (ஜாரத்துவத்தை) ஒழித்தல் வேண்டும். (தன்னுடையசங்கற்பப்பிரகாரம்)பிரமசாரியாசிரமத்தில் நீதிவழுவாதிருக்க முடியாதவர்கள் சாஸ்திரவிரோதமான ஸ்திரீசையோகஞ் செய்யாமலிருக்கக்கடவர். (மடாதிபதிகள் ஆதிபத்திய மடையுங்கால் பிரமசாரி யாசிரமத்திலேயேயிருந்து அதற்குரிய தர்மங்களைத்தவருதுநடத்திவருவோமென்று பிரமாணபூர்வகமாய் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆயினும், அவர்களிற் சிலர் அந்த ஆச்ரமத்திற்குத்தகாதவர்களாயிருக்கிருர்கள். அதாவது, சுபாவத்திலேயே (சரீரக்கூறு முதலியவற்ருலென்று பொருள் கொள்க) அந்த தர்மத்தைக்காப்பாற்றச் சக்தியற்றவர்களாயிருப்பதுவும் மிக இரகசியமானவிஷயமல்ல. இவர்களின்தப்பிதமே [வியபசாரமே]காரணமாகஏனையமடாதிபதிகளுக்கும்சந்நியாசிகளுக்கும் அவமானமும் நிந்தையும் விளைகின்றது. மேற்கூறிய காரணங்களால், காமத்தை யடக்கியாளச் சத்தியற்ற இந்தச் சந்நியாசிகள் அந்த ஆச்சிரமத்தைவிட்டுக் கிரகஸ்தாச்சிரமஞ் சேருவது நன்மையன்ரே.)

4. பரஸ்திரீயை யாசிக்கின்ற வீண் தைரியமுள்ள மூடனுக்குண்டாகும் நால்வகைத் துன்பங்களாவன:— 1. கெட்டபெயர் (அபகீர்த்தி,) 2. சௌக்கியமில்லாத படுக்கை (வியாகூலத்தினல் மனத்திற்குத் தெளிவும் சமாதானமுமற்று நித்திரையில்லாமல் அவஸ்தைப்படுவானென்றுணர்க.) 3. தண்டனை, 4. மறுபிறப்பில் (இந்தக் கெட்டகர்மத்திற்காக) அனுபவிக்கவேண்டிய துன்பங்கள்.

5. எல்லா ஆசைகளிலும், அதிகாசைகளிலும் காமவிகாரமோகமே பெரிதென்க. கெடுக்கும் விஷயத்தில் இதற்கு மேலான யோக்கியதையுள்ளதாய் ஒன்றைக்குறிப்பாமெனில்ஏதுங்காணவில்லை. அது அவ்வளவுபலமுள்ளது. இத்துராசை, அதிகமாம், இவ்விரண்டுமுள்ள மனிதனை, பந்தத்தைக் கொளித்திக்கொண்டு எதிர்க்காற்றிலோடுகின்ற பித்தனுக்குப் போலிக்கலாம்.

[illegible]

6. நியாயஸ்தானத்தில் பொய் பேசாதே. பொய்சொல்ல(மற்ருெருவனை) த்தூண்டாதே. பொய்சொல்பவருக்கு சகாயமாயிருக்காதே. (ஒருவன் பொய்பேசுமளவில் அது பொய்யென்று தனக்குத் தெரிந்திருந்தும் சும்மாயிருந்தால் அதை யொப்பினதுபோலாயிற்று. அதுவும் ஓர்வகைச்சகாயமே.)

7. மயக்கந்தரத்தக்க பானங்களிலும் அப்பேர்ப்பட்ட பதார்த்தங்களிலும ஆசைப்பட்டு அவைகளை வாடிக்கைசெய்யாதே. இதரனுக்கு வாடிக்கைசெய்விக்காதே. இந்தத் துர் அப்பியாசத்தால் மிகுந்த கெடுதி யுண்டென்று தெரிந்து இவ்வகைக்காரியங்களுக்குச் சம்மதிக்காதே.

8. ஜீவவதைசெய்பவனும், பொய் பேசுபவனும், தனக்கென்று கொடுக்கப்படாததை எடுத்துக்கொள்பவனும், பரஸ்திரீயை அபகரிப்பவனும், கட்குடியனும்(பரலோகத்திலல்லாமல்) இவ்வுலகிலுங்கூட தன்னைத்தானே வேருடன்களைந்து கொள்பவனுவான்(யானை தன்றலைமிற்ருனேமண்ணள்ளிப்போட்டுக்கொள்வதுபோலத் தங்களுடைய கேட்டைத்தாங்களே தேடுகின்றவராவர்)

9. நெல்வயலிற் புல்லைப்போல, மனிதனைக்கெடுப்பது காமக்குரோதாதிகள். ஆதலால், (களைபிடுங்கினவயலுக்குச் சமானமான) ஆசாபாசங்களையறுத்த மகான்களுக்குக்கொடுக்கும் கொடை மிகுந்த பயன்படும். "பாத்திரமறிந்து தானங்கொடு."

இன்னும்வரும்.

திருவையாறு - அ-சுவாமிநாதையர்.

பிராமணகுலத்தினுட்பிரிவுகள்.

தொடர்ச்சி.

தெலுங்கு தேசத்திலுள்ள பிராமணர்களில் உட்பிரிவுகளுண்டான விதத்தை இதுவரைக்கும் தெரிந்தமட்டில் விவரித்தாம். தமிழ்நாட்டுப் பிராமணர்களை இங்கு கவனிப்பாம். நாம் இப்பொழுது தமிழ்நாடென்று வழங்கிவரும் சிஷ்டம் யாது? அதன் எல்லைகள் எவை? என்று விசாரிக்குமளவில் தமிழ்நாடென்பது இந்தியாவின் தென்பாகத்தைக் குறிப்பதாகத் தெரியும்; அதாவது தக்ஷிண இந்தியா. இத்தென்னிந்தியாவானது பூர்வத்தில் அரண்ணியமாயிருந்ததென்றும், சாதாரண மனுஷியசஞ்சாரமில்லாத பிறதேசமாயிருந்ததென்றும் சரித்திரங்களால் விளங்கும். அன்றியும், நமது புராணங்களும் தென் இந்தியாவானது அரண்ணியமாயிருந்ததென்றே சாதிக்கின்றன. முதல் முதல் பிராமணர்களுடைய வாச

[illegible]

ஸ்தானம் வட இந்தியாவென்றும், கங்காதிதீரமென்று முரைப்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. புதிதாய் நாம் கட்டுகிற கதையல்ல; எல்லோருக்குந் தெரிந்த விஷயமே. இந்தியாவின் வடபாகத்தில் மாத்திரமே பிராமணர்களிருந்தார்கள். தக்ஷிணபாகங்களெல்லாம் காடாயிருந்தன. இப்படியிருக்க, ஜனத்தொகை அதிகரித்ததனுல் வட இந்தியாவிற் குடியேறியிருந்த அந்தணோத்தமர்களுக்குக் கங்காதிதீரம் போதாமல் அவர்கள் காலக்கிரமமாகவே தென்னுேக்கலானுர்கள். காலவித்தியாசங்களால் காடாயிருந்த தென் இந்தியாவானது நாடாய்த் திருத்தப்பட்டு அரசனும் குடிகளும் அமையலானுர். வடபிராந்தியத்திலிருந்த ஆரிய சிரேஷ்டர்களுடைய மகிமையையறிந்து அம்மகான்கள் தம்முடைய நாடுகளுக்கு விஜயஞ் செய்வாரேயாயின் தமது நாடு சுபிக்ஷமாயிருக்குமென்று நம்பி அப்பொழுது தென்னிந்தியாவை யாண்டவரசர்கள் வடக்கேயிருந்து பிராமணர்களை வரவழைத்து உபசரித்து மானியங்கள் கொடுத்துத் திரவியசகாயஞ்செய்து இன்னும் பலவிதங்களால் தகுந்த மரியாதை செய்து அந்தப்பிராமணர்களின் தர்மங்களைக் கிரமமாக நடப்பித்துவந்தனர். வடக்கேயிருந்து வரும் பிராமணர்கள் ஒருவர் ஒருவராய் வரவில்லை; கூட்டம் கூட்டமாக வந்து தென் இந்தியாவில் அங்கங்கே தங்களுக்கு அரசர்களால் கொடுக்கப்பட்ட நிலபலங்களை வைத்துக்கொண்டு ஜீவித்துவந்தார்கள். வடக்கேயிருந்து வருங் காலத்தில் சேர்ந்து வந்தவர்களானுலும் இவ்விடத்திற்கு வந்தபிறகு அவர்கள் பிரிந்துபோக வேண்டி நேரிட்டது. இவ்விதமாக வந்து அங்கங்கே குடியேறின காரணத்தாற் பிரிந்துபோனவர்கள் ஒரு கூட்டத்தார். அல்லது ஓரிடத்திற்குடியேறினவர்கள்மற்றொருகூட்டத்தாரை அடையாளங்கண்டு கொள்ளும்பொருட்டுத் தாங்கள் எவ்விடத்திருந்து வந்தார்களோ அந்த ஊரின் பெயரையே சிலர் தங்கள் கூட்டத்தாரைக் குறிக்கும் இடுகுறிப்பெயராக வைத்துக்கொண்டார்கள். சிலர் தாங்கள் குடியேறின ஊரின் பெயரை வைத்துக்கொண்டார்கள். சிலர் தாங்கள் சேர்ந்து புறப்பட்ட கூட்டத்தின் எண்ணிக்கை (தொகை) யையே ஒரு குறிப்பாய் வைத்துக்கொண்டார்கள். ஒருவன் எந்தக்கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று அறிந்துகொள்ளும் பொருட்டும், உண்மையாய் அவன் பிராமணனுயின் எந்தக்கூட்டத்தாருடன் கலந்து வந்தவனே அதைத்தெரிந்துகொண்டால் அவனுடைய மெய்யும் பொய்யும் யோக்கியதையுமறிந்து சகவாசஞ் செய்யத்தகுந்தவனுயென்பதை யறியும்பொருட்டும் இங்ஙனம் ஒவ்வோரடையாளம்வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமென்பது யாமெடுத்துரைப்பதேன்? இக்காலத்தில் அநேகசபைகள் [ஸொஸைடீ] ஏற்பட்டிருக்கின்றன.

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

ஒருஸொஸைடியில் மெம்பராயிருக்கப்பட்ட ஒருவன் அதே ஸொஸைடிக்குச்சேர்ந்த மற்றொருவனைத் தான்சேர்ந்திருக்குஞ்சபைக்குச் சேர்ந்தவனென்று நிச்சயிக்க, அந்தச்சபையின் வர்த்தமானங்களைப்பற்றி அவனைக்கேட்டு அவன் அதற்குச்சரியானபதில் சொன்னுலும் அல்லது சிலகுறிப்புகளினுலுமறிந்துகொண்டு அவ்விருவருஞ்சிநேகங்கொண்டாடுவதைக் கண்டிருக்கிறேமல்லவா!

தென்தேசத்திற்குவந்து இவ்விடத்தில் வேறு வேறு ஸ்தலங்களில் குடியேறியிருந்தாலும் தாங்கள் ஒரேவம்சமான பிராமணகுலத்தைச்சார்ந்தவர்கள் ஒரேதேசத்தினின்று வந்தார்களென்றும் அபிமானத்தால் அவர்கள் ஒருவரையொருவர் ஒருஊராரை மற்றொருஊரார் அன்புடன் விசுவாசித்துவந்தார்கள். ஆனுலும் இந்த அன்பும் விசுவாசமும் ஒரேஊரில் சேர்ந்துவாழும் ஜனங்கள் ஒருவருக்கொருவரில் அதிகப்பட்டு மேற்படுமேயன்றி, அவ்வளவாக ஒருஊராருக்கும் மற்றொருஊராருக்கும் அதிகப்படாது. அக்காலத்தில் பிராமணர்களுக்கேற்றசாலைகளும் மற்றவாகனுதி அனுகூலங்களுமில்லாத காரணத்தாலும், சுக துக்கம் ஆபத்து சம்பத்துகளுக்கு அயல்வீட்டில் வாழும் சுதேசியுதவுகிறதுபோல் அயல்ஊரான் உதவமாட்டானுதலாலும், அவ்வூருக்குள்ளேயே விவாகமுதலியகட்டுகளால் ஒருவருக்கொருவரிருக்கும் சிநேகத்தைப் பலப்படுத்தவேண்டியது அவசியமாயிற்று. விவாகத்தால் நேசப்படுமென்பது அந்தமத்தின் தாத்வர்த்தத்தாலேயே வெளிப்படும். விவாகமென்ருல்:—விசேஷமாக வகிக்கிறது என்று பொருள்படும். இதுவேகாரணமன்றி வேறில்லை. (இன்னும்வரும்)

திருவையாறு. அ. சுவாமிநாதய்யர்,

பல்லாரி.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விரோதிஸு மார்கழி-மீ 2-உ

சிருங்காரமஞ்சரீ மண்டனம்.

ஐய? ஸ்ரீமான் விக்கிரமகவி என்னும் அரசர் எமக்கனுப்பிய புத்தகத்தைப்பார்வையிட்டோம். அப்புத்தகத்திலநேக கேரளவித்துவான்கள் இயற்றியகாவியங்களடங்கியிருக்கின்றன. அவற்றுள் ஏதோசிலர் சிருங்காரமஞ்சரி என்னுங்கிரந்தத்தைக் குற்றமுள்ளதாகக் கூறியதை மறுத்து சிலவறிஞர்கள் சொன்னயம் பொருணயம் பொருந்தியும், அணிகணிறைந்த அதிகம்பிரவிஷயங்கள் அ

[illegible]

மனைதும், இரசிகருள்ளத்தையுருக்கும் சுவைபெற்றும் க்பைண்டைக்காலத்துக் கவிமணிகள்பெருமையைவிளக்கும் உயர்துஜங்களாயும், அறிஞர்களுக்கானந்தத்தவிளைவிப்பதாயுமுள்ள விஷயங்கள் பலவமைந்துள்ளன. அவ்வப் புத்தகங்களையியற்றிய பெரியோர் சரித்திரங்களும் அவ்வப்புத்தகங்களின் முகவுரைகளாகச்சேர்க்கப்பட்டன. இவ்விதமுயற்சி இவர்க்குள்ள அருமையானதேசாபிமானத்தைக்காட்டுகின்றது. இவரைப்போன்றவபிமானிகள் ஆங்காங்கநேகர்வசிப்பரேல்,அரியகாவியங்கள்எட்டுணையேனுமொழிபா. இத்தகையஉண்மையபிமானிகள் தென்னுட்டிற்குறைந்துவருவதாற்றுன் இத்தேசத்துக்கவிகளின்பெரும்புகழும் நீடூழிநிலைபெருதொழிகின்றன.பாரும்ன்! இக்காலத்தும் நன்னுட்டில் ஒன்பான் சுவையொருவழிததும்பவும் உயர்ந்தோருள்ளமுருக நல்லிசையமையப் பேரணிபெருகத் திருவமுதத்தைத் துவட்டச்செய்யும் திறமைதுலங்கபற்பலகாவியகளை சங்கற்பித்தவுடனே கற்பிக்கும் பேராற்றல்பெற்றும், பாஸின், ஸௌவிதல்லன், பட்டாரஹரிச்சந்திரன், ராஜசேகரன், பட்டபாணன், பட்டமுராரி, பண்டிதசார்வபௌமன், ஸ்ரீஹர்ஷன், காளிதாஸன், மயூரன், தக்ஷீமீந்திரன், ஜயதேவன் முதலிய முற்காலத்துக்கவிகள் ஒருங்குசேர்ந்தவதரித்தாரோவென ஐயங்கொள்ளவெழுந்த மகாகவிகள்பலர் வாழ்ந்துவருகின்றுர்கள். இங்ஙனமிருக்க இவர் பெயரேனுமற்றவர் செவிக்கெட்டுவதில்லையாயின், இவர் திருவுருவமாவது அல்லது அவர் காவியமாவது எட்டுவதெங்ஙனமமையும்? ஐய தேசாபிமானிகாள்! இதுகாறுஞ்சென்றதொழிபட்டும்; இனியேனும் சிறிது தயைகூர்ந்து நும்சமீபத்தில் வசிக்கும் கவிகளைஆதரியுங்கள்! அவர்களிபற்றியநன்னூல்களைவெளியிட முயலுங்கள் ! அவ்வளவே செய்யின் அவருக்கு அது ஒருபெரும்உபகாரமாமென்பது எமது துணிபு. இவ்விதமித்தேசத்தில் நற்காவியப்பயிற்சி யொழிவது யாது பற்றியென வாராயின் எமக்குத் தோன்றுவதிதுவே. "இந்நாட்டில் அறிவுஞ் செல்வமும் ஒன்றுடன் மற்றது பொருந்தாதில்லையே" உலகத்தில் ஒருவன் அறிவிற்சிறந்தவனுயின் அவன் அக்காவியச்சுவையை யறிவான்; தன் சிநேகிதரிடஞ் சொல்லுவான், அறிஞர் கூட்டத்தில் புகழ்வான், சிடர்களுக்குபதேசிப்பான், அவ்வித அழுக்கற்ற வறிஞர் அகப்படுவரேல் எமது பிரபுக்களாலாவதொன்றுமில்லை. அவர்கள் சுவையறிந்தவராதலின் தாமே அவற்றை வெளியிட்டு மகிழ்வார். இக்காலத்தில் அவ்வித வறிஞர் அகப்படாமை செல்வராற்றுன் எவ்விதமாவது அச்சிடுதல் முதலிய வழிகளால் அவ்வப்புத்தகங்களை வெளியிட்டுக் கவிகள் தத்தம் புகழற்திருமேனி பெருக வளரவேண்டும். இப்பொழுதிவர் அரசகுமாரராதலின், தம்மினத்துக்கவி

[illegible]

கள் புகழுடைய வேண்டியமுயற்சியெடுத்துவருகிறுர். இவர் தந்தேசத்துக் கவிகளனைவரையும் மற்றவரையும்ஒருவாறுதரிக்க இனி முயலும்படி அவர் திருவுளம் திரும்பக்கடவுள் அருள்புரிவாரென அவர் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

கடிதம்

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாரமாட்டா.

ப்ரம்மவித்தியா பத்திரிகாசிரியர் அவர்களுக்கும் அப்பத்திரிகா நண்பர்களாகிய அறிஞர்களுக்கும் அநேக நமஸ்காரம்.

ஐயா,—பண்டிதர் பாஷ்யாசாரியார் அவர்கள் தாம் எழுதி முன்பத்திரிகையில வெளியிட்ட ஓர் நிருபத்தை க்கண்டு மிகக்களித்தோம். அந்நிருபம் ஸ்ரீமத் பாணினி மாமுனிவர், ஆசிரியர் பதஞ்சலியார மற்றுமுள்ள வையாகரணர் இவர் கருத்துக்களை யெடுத்து விளக்குகின்றது. அப்பத்திரிகையில யாம் ஏதோ முன் எழுதய நிருபத்தில் சற்சில குற்றங்க ளிருப்பதாயும அதைத்தாம் மறுப்பதாயும் வெளிவருகிறுர்கள். ஆதலின் அவ்விஷயத்தில யாமெழுதியது இவர்களிடத்திற் குற்றங்கூறவேண்டியதென்னும் அபிப்பிராயத்தால் அல்லவென்பதை வெளிப்படையாய்க் காட்டவேண்டி அவர்களுக்கு ஓர் அஞ்சலிசெய்து, யாம் ஆசிரியரிடம் கற்றபடியும, எமது சிற்றறிவிற்கெட்டியபடியும, எமக்குக் கிடைத்த நூலளவிற்கேற்பவும், அவர்கள் எமது கடிதத்தை மறுத்தவிடம்விடை பகர்ந்திடவெழுந்தோம. இவ்விஷயத்தில் நமது ப்ரம்மவித்தியா பத்திரிகையைப் படிக்கும் ஒவ்வொரு வறிஞரும் சிறிது கிருபைகூர்ந்து நடுநிலைமையாய்த் தீர்மானமளிக்கக் கேட்டுக்கொள்கின்றேம்.

இவர்கள் எழுதியதில் ஸ்ரீபாணினிமாமுனிவர் இயற்றிய அஷ்டாத்தியாயி உ-ம பக்கத்தில் உள்ள [[illegible]) என்னுஞ்சூத்திரத்தில "அர்ச்சா"என்னும் சொல்லுக்குப் "பிரதிமை" பொருளாகாது" என்றும, பின் "பூசித்தல் ஒன்றெ பொருள்" எனவும், "பிரதிமை" என்ற அப்பதத்தை மாபாடியத்திலேனும், ஸ்ரீகாசிகையிலேனும் பொருள்படுத்தவில்லையாதலின்,' எனவும் இருக்கின்றது. இவ்விஷயத்தில் சொல்லவேண்டியது சிறிதுண்டு. அறிஞர்காள்! வியாகரணம்படித்த எந்தப் பண்டிதர்க்கும் மாபாடியம் வகுத்தருளிய ஆசிரியர் பதஞ்சலியாரேனும் ஸ்ரீகாசிகையியற்றிய ஸ்ரீஜயாதித்தியவாசாரியரேனும் இச்சூத்திரத்திற்கு உரை செய்யாதொழிந்தது தெரியாத விஷயமன்று. அவ்விருவரும் யாம் சொன்ன பொருளை அச்சொற்பொருளாய் அமைக்காதுபற்றி அது வழுப்பொருளாயின், நம் பண்டிதர் அவர்கள் சொன்னபடியும் பொருள்படுத்தாமையால் அப்பொருள் மாத்திரம் நிலைப்பதுதான் எப்படி? இனி யாம் அவர்கள் சொல்லைக் குற்றங்கூறவந்தோமில்லை. இவர்களே எடுத்தோதிய பாஷிய வசனத்தில் 'அர்

[illegible]

ச்சா' என்னும் பதம் தேவதாப் பிரதிமைகளைக் குறிக்க கண்டோம். எங்ஙனமெனில், "மௌரியர் பிழைப்புக்கென 'அர்ச்சைகளைச் செய்துகொண்டார்கள்' என்பதாதி வாக்கியங்களில் அப்பதம அப்பொருளைக் கொடுப்பதால் என்க. இனி வேறிடங்களில் 'அர்ச்சா' என்னுஞ்சொல் பேரத்தைக் குறிக்குமென்பது இருவரும் ஒப்பவேண்டிய விஷயமாயின் இவ்விடம் இவர்கள் தான் சொல்லும் பொருளுக்குத்தகுந்த பிரமாணமின்மையாலும், மற்றையவிடங்களைப்போல் இவ்விடத்தையும் கொள்வதில் தடையாதுளது? இனி அவ்வச்சூத்திரத்தில் அவ்வப்பதங்களுக்கு அவ்வப்பொருள்எழுதாவிடம்வேறு பொருள்கூறுவதமைபாதெனவாதிப்பரேல் அனேகமாய் வியாகரண பாஷியம் முழுதுமே அப்பிரமாணமாயொழிய நேரிடும். இங்ஙனமிருக்க "அர்ச்சை என்னும்சொல்லுக்குப் பூசித்தல் ஒன்றே பொருள்" என்று வற்புறுத்தியதற்குக் காரணம் யாதோ அறிகிலம்.

இனி "ஜீவிகார்த்தே சாபண்யே" என்னுஞ் சூத்திரத்தினுள்ள பாஷியத்தையும் வேறு பொருள்படுத்தினார்கள். அதற்கு மேற்கோளாகப் பல வசனங்கள் எடுத்தோதப்பட்டன. மேலும் "மௌரியர் பொருளுக்கு அர்ச்சைகளைச் செய்துகொண்டார்கள்" என்னும் பாஷியவசனத்தை எடுத்து அதனால் அநாரியரான மௌரியர் என்பவர்க்கே உரியது பிம்பாராதனம் என வழங்கும் பாஷியகாரர் "பிம்பாராதனம் அவைதிகமென்றே தாற்பரியப்படுகிறார்" என்றும், அவ்விதப்பொருளே உரையாசிரியர்களுக்கும் சம்மதமென்றும் அதற்கு மேற்கோளாகக் கையடம, பாஷிப்ரதீப உத்தியோத, ஸ்பூர்த்தி கிரந்தங்களையும் காட்டுகின்றனர். இவ்விஷயத்தில் எமக்கவ்வளவு விரோதமில்லை. உலகத்தில் பிழைப்புக்கென ஓர் பிம்பம் இருக்கக்கூடாது" என்பது எமது வாதமல்ல. பின்னர் யாதெனில், மாபாடியஞ் செய்தருளிய காலத்திலும் "விக்கிரகாராதன வழக்கம் இருந்ததென்று காட்டவேண்டியதே எமது கருத்து. அதை எவர் செய்யும் பூஜைக்கிடமாக்கினாலும சரி அது எவ்விதமானாலும் சரி...பாஷ்யகாரர்காலத்தில் இந்தப் பிம்பாராதனம் என்னும் பிரஸ்தாபமே இல்லையென்று நமது பண்டிதர் "ஹிந்து" பத்திரிகையில் எழுதியது அதுகொண்டே மறுக்கப்படுமல்லவா! இவ்விடத்தில் ஆராயவேண்டியதொன்றுண்டு. அதாவது "அவ்விடத்திய பாஷ்ய வசனங்களை ஆராயின் அக்காலத்தில் விம்பபூஜை எங்கும் நிறைந்து நின்றது என்பது வெளியாகும். அக்காலத்தில பிம்பாராதன மிகுதியால மௌரியரெனப்படுஞ்சிற்பிகள் பற்பல தேவதா பிரதிமைகளைச்செய்யத்தலைப்பட்டனர்.

அதை வாங்கிவைத்து மற்றவர் பூஜித்துவந்தால் மற்றவரைப்போல் இவர்களும் சில பிம்பங்களை விற்காது பூசிப்பதுமுண்டு. ஆரியர்கள் பிம்பங்களை வைத்துப் பிழைப்பதாவது விற்பதாவது வழக்கமில்லை. ஆதலால் பிழைப்புக்கென உள்ள பிரதிமைகள் ஆரியரிடம் அகப்படாதுபற்றி மௌரியர் பிரதிமையை உதாரணமாக ஆசிரியர் கூறினரென்பதுண்மை. இதனால் அவர் பிம்பபூசை அவைதிகமென எவ்விதஞ் சாதிக்கலாம். இனி அதைப் பிழைப்புக்கென விநியோகித்தல்மட்டில் அவைதிகம் நிந்தியமென்பது அவர் கருத்து.தாய்விளங்கும். வரும்.

[illegible]

மதாபிமானம்.

இன்னும் சிலநாளில் நாமெல்லாம் கிறிஸ்தவராய்விட்டால் பின் நீங்கள் என்செய்வீர்கள். கிறிஸ்தவராவோரெல்லாம் உங்கள்பேரில் துவேஷமே கொள்வதால் கிறிஸ்தவரான அவர்கள் பின் உங்களுக்குப் பாதிரி வேலைதானுந்தரமாட்டார்களே! பாதிரிகள் அங்கங்கே கிறிஸ்துமதத்தைப்பரப்பி உங்கள் மதத்தை நாசஞ்செய்துவர, நீங்கள் அவர் முன்னே புறமதகண்டனஞ்செய்து நம்மதத்தை நிலைநிறுத்திவிட்டோமென்று சிவிகையேறியும் விருதுபூண்டும் கொடிபிடித்தும் வெளியேவர வெட்கமில்லையா! நீங்கள் உங்கள் வேலை யெதுவென்று சிறிதேனும் சிந்திக்கிறீர்களா. இப்படி அநியாயமாய் இத்தேசத்து ஜனங்கள் தங்கள் தங்கள் ஆசாரங்களை விடுத்து அநாசாரங்களைக் கைக்கொள்ளவும், பலர் தம்மத ஆராய்ச்சியின்மையாலும் அறியாமையாலும் கிறிஸ்துமதப் படுகுழியில் விழுந்து தடுமாறவும் நீங்கள் உல்லாசமாய் இருப்பது அழகன்று. எத்தனையோ பெயர் பற்பல பத்திரிகைகள் வாயிலாக இவ்விஷயத்தைக்குறித்து அடிக்கடி ஓலமிடுகின்றார்களே, அப்பத்திரிகைகளெல்லாம் உங்களுக்குக் கிட்டுவதில்லையா? அன்றிக் கிட்டியவிடத்தும் சும்மா புலம்பிப்போகட்டும் நமக்காகவேண்டியதென்ன வென்றிருக்கிறீர்களா? அல்லது உங்கள் பல விவகாரத்தொந்தரையில் இதைக்கவனிக்க இயலவில்லையோ? அல்லது யோகசமாதியில் முழுகிக்கிடப்பதால் இவ்விவகாரங்கள் அதனைக்கெடுத்துவிடுமென்று அஞ்சிக் கண்ணை இறுக மூடிக்கொண்டீர்களா? சுவாமிகாள்! நீங்கள் இவைகட்கெல்லாம் ஒருமொழி உங்கள் திருவாய்களைத்திறந்து அருளலாகாதா. சும்மாவிருக்கும் நமக்கெல்லாமுள்ள அபிமானம் உங்கட்கு இல்லாமற்போனதென்ன? பாதிரிகள் அந்நியதேசத்திலிருந்து அளவற்ற பொருள்களைக் கொண்டுவந்து செய்யும் வேலையினும், கோடி கோடியாக ஆஸ்திவைத்திருக்கும் இத்தேசத்தவராகிய நீங்கள் சிறிது நினைத்தால் எவ்வளவோ காரியங்களை இலேசாகச்செய்துவிடலாமே. மதசாஸ்திரங்களைப் போதிக்கும் பாடசாலைகளை அங்கங்கே வைக்கலாம். ஜனங்களுக்கு நம்மத ஆசாரங்களின் அருமையைப்போதித்து அவ்வழி நடத்தலினால் உண்டாகும் பிரயோஜனங்களை எடுத்துக் காட்டலாம். வேத ஆகம புராண இதிகாசங்களின் உண்மைக் கருத்துகளை வெளியிடலாம். அனேக ஜனங்களை ஒருங்குகூட்டிப் பிரசங்கம் செய்து அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம். பல சாஸ்திரங்களை அச்சிட்டு வெளிப்படுத்தலாம. இக்காலத்தவர் அறிவுக்குத்தக்கபடி பல புத்தகங்களை எழுதிவிடலாம். பல பத்திரிகைகளைப்பிரசுரஞ்செய்து அவைகள் வாயிலாக எல்லாரும் தத்தம் காரியங்களை முடிக்கலாம். ஏழைகளாயுள்ளவர்களும் பணம் செலவு செய்யப் பயப்படுவோரும் உய்யும் பொருட்டுச் சிறுதுண்டுப்பத்திரிகைகளை அச்சிட்டு அங்கங்கே இனாமாகக் கொடுக்கலாம். உங்கள்போன்ற பாதிரிகள் இப்பொழுது இப்படியெல்லாம் செய்துவருதலை நீங்கள் ஏன் கவனிக்கின்றீர்களில்லை. மேற்கூறியபடியெல்லாம் செய்வதற்குத் தக்க போதுமான பொருள் உங்களிடத்தே மலிந்துகிடக்கின்றதே. இப்படியெல்லாம்செய்தால் உங்களுக்குப் பாவம் வருமென்று பயப்படுகின்றீர்களா? அல்லது பொருள் செலவழிந்துவிடுமென்று அஞ்சுகிறீர்களா! அப்படி யொருகாலத்தும் அஞ்சவேண்டாம். நீங்கள் அப்படிச்செய்யத் தொடங்குவீர்களாயின் எவ்வளவோ ஜனங்கள் அதற்கு உதவிபுரிந்து வேண்டிய பொருளுதவி மேலும் மேலும் செய்வார்களே! முன்னையிலும் மிகுந்த பயபக்தியோடு உங்களைத்தெய்வம்போல் கருதுவார்களே. இப்பொழுது அஃதில்லாமையாலல்லவா உங்களைப் பலர் பலவாறு நிந்திக்கிறார்கள். இப்படியெல்லாம சொல்வது உங்கள்பேரில் விளைந்த

பொருமையால் என்று நீங்கள் கனவிலும் நினைக்கவேண்டாம். உங்கள்மேல் வைத்த அன்பினாலேயே நாம் இப்படி உங்களிடத்தில்மோதிக்கொள்கின்றோம். ஆகையால் போனதுபோக இனிமேலாகிலும் நீங்கள் சற்றே கண்திறந்து பார்த்து எங்கள்பேல் கருணைகொள்ளல்வேண்டும். ஆரியநண்பர்காள்! நீங்களும் இனி அயர்ந்து தூங்காமல் நன்றாக இவ்விஷயத்தில் முயலவேண்டும். மடாதிபதிகளை நெருக்கவேண்டும். நாமும் ஒற்றுமையோடு ஒவ்வொரு காரியங்களைச்செய்தல்வேண்டும். சோம்பலையும் லோபத்தையும் ஒழித்துவிடவேண்டும். பலதுளி பெருவெள்ளம் என்றதுபோல் நாம் பலர்கூடி முயல்வோமானால் எதுதான் ஆகமாட்டாது. பாதிரிகள் இவ்விஷயத்தில் செய்யும் தந்திரங்களை யறியீர்களா? கிறிஸ்தவராயுள்ள ஒவ்வொருவரும் தவறாமல் தங்கள் தங்களால் இயன்றளவு மதவிருத்தியின்பொருட்டு மாதந்தோறும் பாதிரிகளிடத்தில் கொடுக்கிறார்கள். பாதிரிகள் அப்படிச் சிறிதுசிறிதாக வாங்கியல்லவா இவ்வளவு பெரிய காரியத்தை முடிக்கிறார்கள். நாமும் அப்படியே செய்வோமானால் எவ்வளவு இலேசாகும். இதுவிஷயத்தில் முன்வந்திருக்கின்ற இந்து டிராக்ட்டுசொஸைட்டியையே பேராதாரமாக வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம். அங்கங்குள்ள ஜனங்கள் கிறிஸ்தவர்கள் செய்வதுபோல் மாசந்தோறும் தங்களால் இயன்றளவு இந்துடிராக்டு சொஸைட்டிக்கு உதவி இன்னும் இன்னும் அதை மேலுமேலும் விர்த்திக்குக்கொண்டுவரலாம். எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாமென்றபடி நாம் நல்ல மதாபிமானத்தோடு ஒத்துநடப்போமேயானால் இம்மை மறுமைச் சுகங்களைத் தப்பாமற் பெறலாம்; நந்தேசமும் முன்னுக்குவரும்; நம் வைதிக சமயந் தழைத்தோங்கும்; ஈசுரகிருபை யுண்டாகும்; நாடெங்குஞ் செழித்தோங்கும். சொற்ப முயற்சியால் எவ்வளவோ பெருங்காரியங்கள் அநுகூலமாகத் தக்கதாயிருக்க நாம் சும்மா முன்போல் அயர்ந்து தூங்கலாகாது. பாதிரிகள் தந்தேசத்தைவிட்டு இங்குவந்து இவ்வளவு வேலைசெய்ய, நாம் பேடிகள்போல் சும்மாயிருக்கலாமா. இதரமதஸ்தர்களை நாமிந்துமதத்தவர்களாக்காவிட்டாலும் நமது ஜனங்களையேனும் நாம் காக்கவேண்டாமா? மடாதிபதிகளே! வித்துவசிகாமணிகளே! செல்வர்களே! வியாபாரிகளே! பிராமணோத்தமர்களே! மற்றுள்ள ஆரியசகோதரர்களே! மதவிஷயத்தில் அபிமானம் வையுங்கள்; இதுவரையில் இருந்ததுபோல் அயர்ந்து தூங்காதீர்கள். மதாபிமானத்தால் நாமெல்லாஞ் சீர்ப்பட்டு முன்னுக்குவந்து சுகமடையலாம். சாந்தத்தையும் நீதியையும் விரும்பிய நமக்கு அப்படியே நீதியாகிய செங்கோலைப்பிடித்த தயாளசீலராகிய அங்கிலேய கவர்ன்மெண்டை ஈசுரன் கிடைக்கச் செய்திருக்கிறார். அவ்வரசு தழைத்தோங்க நமது பரமேசுரன் நல்லருள் புரிய அவருடைய திருவருளைப் பிரார்த்திப்போமாக.

வாழ்கவந்தணர்வானவரானினம
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

இந்துமித்திரன்.

பிரம்மக்கியானபோதினி பத்திராதிபர் அவர்கட்கு விஞ்ஞாபனம்.

ஐயா,—யாம் ப்ரம்மவித்தியாவில் எழுதிய வினாக்களுக்கு நீர் எழுதிய விடைகளைப் பார்த்தோம். வினா எவ்வளவோ விடையும் அவ்வளவே யளிக்கவேண்டுமென்னும் நியதியைக் கடந்தீர். 1-வது விடையில் "பிரம்மசமாஜம் பூர்வமஹரிஷிகளின் கருத்தாதலால்" என்பது அந்தவிடத்தில் அநாவசியகமாம. இங்ஙனமே சிலவிடங்களில் அநாவசியகமான விடைகள் தரப்பட்டன. இனி அளவுகடந்து விடைதராமலிருக்க மன்றாடுகின்றோம்.

4-வது வினாவுக்கு விடைதராமல் சில வாக்கியங்களை வரைந்துவிட்டு, அதை எதில் சேர்த்துக்கொண்டாலுஞ் சேர்த்துக்கொண்டாலும் என எழுதிவிடுவது தகுதியன்று; தத்துவவிஷயமாக ப்ரம்மசமாஜிகளுடைய சித்தாந்தத்தை அறிய விரும்பியே வரைந்தமையாலென்க. எமது கருத்தையறிந்தினியேனும் நான்காவது வினாவுக்குச் சரியான விடையளிப்பீரென்று நம்புகின்றோம்.

பிரமபுரவாசி.

ப்ரஹ்மவித்யாபத்ரிகாஸம்ப்ரதாயாநி விக்ரயார்த்தாநி புஸ்தகாநி.

வேதஶீர்ஷவாஸுதேவம்	௦	௧௨	௦
ஆதித்யஸ்தோத்ரகாரிகா ஸவ்யாக்யா	௦	௧	௦
ஸ்ரீ வேதாந்தமதஸம்ப்ரதாயாஷ்டகம்	௦	௧	௦
ஶிவதத்வவிவேகஸஹித ஶிவார்ச்சநசந்த்ரிகா	௦	௨	௦
த்ர்யம்பகஸ்தவஸஹித த்ர்யம்பகஸ்தவவ்யாக்யாநம் [ஸஹிதம்.	௦	௧௨	௦
ப்ரஹ்மதர்கஸ்தவ:- ஸவிவரணஞ்ச.	௦	௮	௦
ஆதித்யஸ்தோத்ரரத்நம்- ஸவ்யாக்யா.	௦	௪	௦
ஶிவமஹிம்கலிகாஸ்துதி ஸவ்யாக்யா	௦	௭	௦
ஶிவத்யாநபத்ததி:	௦	௧	௦
ராமாயணதாத்பர்யஸங்க்ரஹ ஸவ்யாக்ய:.	௦	௨	௦
பாரததாத்பர்யஸங்க்ரஹ ஸவ்யாக்ய:	௦	௨	௦
ஸித்தாந்தலேஶஸங்க்ரஹ:	௧	௦	௦
ரத்நத்ரயபரீக்ஷா ஸவ்யாக்யா.	௦	௨	௦
பஞ்சரத்நஸ்துதி ஸவ்யாக்யா.	௦	௧	௦
வரதராஜஸ்தவ: ஸடீகம்.	௦	௧	௦
ஆத்மார்ப்பணஸ்துதி: ஸாநந்தோல்லாஸம்.	௦	௦	௯
ஶிவகர்ணாம்ருதம்	௦	௪	௦
ஆத்மவித்யாவிலாஸ: ஶிவஶிவநவிகவஶிராஜாவம்	௦	௦	௯
நாராயணாஸ்தகம்.	௦	௦	௯
ஸாரார்த்தஸம்ஹிதாஸாஷ்யம்.	௦	௮	௦
ஶ்லோகத்ரயீவ்யாக்யா	௦	௧	௦
வைராக்யஶதகம்	௦	௫	௦
ஸௌந்தர்யலஹரீ.	௦	௯	௦

Chidambaram:—Printed and Published for the proprietor at the Brahmavidya Press.

ப்ரஹ்மவித்யா.

பத்திரகிரயம்.

1-வருஷம்	2	12	0
6-மீ	1	8	0
3-மீ	0	14	0
1-காபி	0	2	6
இலங்கைக்கு	3	8	0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவதல்லது ரூபா 1-க்கு அணா 1-சேர்த்துத்தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

ஸ்ருதிப்ரஹ்மதிவேதவேதஸங்கேதநமேதாவிந:॥ ஸ்வஸ்ய ப்ரஹ்மத்வவேதகஸ்ய ஏவ லவிஷ்யதி॥

௪-புத்தகம்] சிதம்பரம்:—, ௧௮௯௦ ௵ ஜனவரி மீ ௰௫உ [இலக்கம் ௰

பத்ரிகாநியமா:

க- யே தாவதேவேக்ஷணே ஸ்வீயாம் பத்ரிகாம் த இச்சேயு: ஹீயமாஸாம் ப்ரேஷயித்வா வார்ஷிகம் த்ரவ்யம் ப்ரேஷணீயம் ஶாபேணைவ்யம் காயநிர்வாஹ்ய ஶ்ரு-

உ- தஸ்ய பக்ஷாயேவ பத்ரிகாதயோ விஶேஷ்யா:.

ந- ஸ்வயா: பத்ரிகாஸமேவ பத்ரிகாயாம் நிவேஶயிதும் ப்ரேஷ்யந்தே. தாஸ்வக்ஷராம் காககைர்லேகத: ஸம்பாக்ஷ்யா விஶேஷ்யா: யத்ரவௌரஷ்ஷஜம்ஷணம் நதாவாஹிஹாவகஸ:-

ச- ஸ்வயே பத்ரிகாக்ராஹகா: தேஷாம் நாமயாமாதி ஸம்யக்லிகிதவ்யம். யஸ்ய ஸ்வக்ராமாந்தரயாநம் தஸ்ய ஸம்யம் விஜ்ஞாபநீயம்.

ரு- ஸ்வயஸ்ய யிகம் விஷய: ஜிஜ்ஞாஸ்யதே தஸ்மிந் ஸம்ப்ரேஷ்யாயுக்ஷாமாத்ரம் ஸ்வயாவதிநீ வீதிகாம்ஸம்ஜ்ஞாநதே.

சூ- ஸ்வயதி ப்ரேஷிதா: கேநாபிகாரணேந நப்ரகடீக்ரியந்தே நவாநஸ்தா: ப்ரேஷ்யந்து.

எ- ஸ்வயதிநவார்ஷாக யந்நப்ரேஷ்யதே பத்ரிகா.

இதி-
ரா நாராயணாய்ய:
நிவேதக
விதம்பரம்-

பத்தரிகாவிதானங்கள்.

க. பத்திரிகை வேண்டுவோர் பரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும.

உ. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேணடும்.

ங. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒர் பக்கத்தில் நலலமை கொண்டு சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெறா.

ச. கையொப்பக்காரர்கள் ஊர்பெயர்முதலியவற்றை நன்றாக எழுதியனுப்புதல்வேண்டும. வேறு ஊர்களுக்குப் போகநேரிடின அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

ரு. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணா லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

சூ. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படமாட்டா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ்,
சிதம்பரம்